

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி ஆலங்குடி பேரூர் கழகம் சார்பில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஆலங்குடியில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ மெய்யநாதன் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினர். ஆலங்குடி பேரூர் கழக செயலாளர் ஆ.பழனிக்குமார் அனைவரையும் வரவேற்றார். தலைமைக் கழகப் பேச்சாளர்கள் எழும்பூர் கோபி, ஆலங்குடி செல்வராஜ், இளம் பேச்சாளர்கள் உமாராணி பிரபு ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். நிகழ்வுகளில் மாவட்ட துணைச் செயலாளர்கள் ஞான.இளங்கோவன். ஸ்ரீதேவி அண்ணாதுரை, ஒன்றியச் செயலாளர் கே.பி.கே.டி.தங்கமணி, அரு.வடிவேல், எல்.குமார் (எ) துரைக்கண்ணு, பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம், ஆலங்குடி பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம், கீரமங்கலம் பேரூராட்சி தலைவர் கே.சி.சிவக்குமார், மகேஸ்வரி சண்முகநாதன், கருணாகரன், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், ஆர்ட்டிஸ்ட் எஸ்.முருகேசன் மற்றும் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்றத் தொகுதி குத்தாலம் கிழக்கு ஒன்றியக் கழக பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி.) கூட்டம் மங்கைநல்லூரில் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் உரையாற்றினார். உடன் பூம்புகார் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மன்னை த.சேழராஜன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், குத்தாலம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் மங்கை எம்.சங்கர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், குத்தாலம் ஒன்றியக் குழு தலைவர் மகேந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.




ஆளுநர் ரவியை எதிர்த்து திருவாரூரில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட,ஒன்றிய,நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

# களத்தில் வைத்த கோரிக்கைகளை, அதிகாரத்திற்கு வந்ததும் நிறைவேற்றிய கட்சி, இந்தியாவிலேயே தி.மு.க. மட்டும்தான்!

## சென்னையில் நடைபெறும் 48–வது புத்தகக் காட்சியில் ஊடகவியலாளர் ஜீவசகாப்தன்– வாசகர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பேச்சு!

**05.01.2025 அன்று கலந்துகொண்டு, வாசகர்களுடன் கலந்துரையாடினார்.**




சென்னையில் நடைபெறும் 48-வது புத்தகக் காட்சியில் திராவிட இயக்க ஆளுமை ஒருவருடன் தினந்தோறும் வாசகர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் நிகழ்ச்சியை முத்தமிழறிஞர் பதிப்பகம் நடத்தி வருகிறது.

இதில் 05.01.2025 அன்று ஊடகவியலாளர் ஜீவசகாப்தன் கலந்துகொண்டு, வாசகர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது அவர் பேசியதாவது:

இல்லாதவர்களுக்கு, இயலாதவர்களுக்கு உழைப்பதற்காகவே கட்சி, ஆட்சி, பதவி என்று கருதியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அத்தகைய கலைஞரின் பெயரால் ஒரு பதிப்பகம் உருவாக்கப்பட்டுள்ளது.

**பெரும் வாய்ப்பு**

பெரியார் எதையெல்லாம் மாற்ற வேண்டுமென்று நினைத்தாரோ, அதையெல்லாம் சட்டத்தின் வாயிலாக மாற்றிக் காட்டிய பெரும் வாய்ப்பு கலைஞருக்கு கிடைத்தது.

**நிறைவேற்றப்பட்ட தீர்மானம்**

அண்ணாவுக்கு இயற்கை அந்த வாய்ப்பை நீண்ட காலம் வழங்கவில்லை. முதல் சுயமரியாதை மாநாட்டின்போது கலைஞருக்கு வயது 5. பரம்பரைச் சொத்தில் பெண்களுக்கு உரிமை வழங்க வேண்டுமென்று, அந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு, 1989-இல் சட்டம் கொண்டு வந்தவர் கலைஞர்.

குடிசைகள் இல்லாத சமூகம் படைக்க வேண்டும், பிச்சைக்காரர்களுக்கும் உரிமைகள் கிடைக்க வேண்டுமென்று, கலைஞர் திரைப்படங்களில் எழுதிய வசனங்கள்தான், அவர் ஆட்சிக்கு வந்தபிறகு குடிசை மாற்று வாரியமாகவும், பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு மையங்களாகவும் உருவாகின.

**கலைஞர் தனித்து நிற்கிறார்**

இப்படி கலைஞர் தீட்டிய திட்டங்கள் அனைத்துமே நீதிக்கட்சி காலத்தில் இருந்து திராவிட இயக்கம் பேசியவை, எழுதியவை, அதற்காகப் போராடியவை. அவற்றையெல்லாம் நிறைவேற்றுகிற கொள்கை உறுதியும், ஆழமான பார்வையும் கலைஞருக்கு இருந்தது. அந்த இடத்தில்தான் மற்ற முதலமைச்சர்களிடத்தில் இருந்து கலைஞர் தனித்து நிற்கிறார்.


**நிறைவேற்றிய கட்சி**

களத்தில் நிற்கும்போது வைத்த கோரிக்கைகளை, அதிகாரத்திற்கு வந்தபோது அதிகம் நிறைவேற்றிய கட்சி இந்தியாவிலேயே திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான். எனவே, திராவிடம் என்றால், ஒரு கட்சி என்றோ, ஆட்சி, அதிகாரத்தை கைப்பற்றுவது என்றோ சுருக்கிப் பார்க்க முடியாது. திராவிடத்திற்கு கடந்த கால வரலாறு இருந்தது, நிகழ்காலம் இருக்கிறது, வருங்காலமும் உள்ளது.

இவ்வாறு அவர் பேசினார்.



வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடியின் ஆலோசனைக்கிணங்க துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி திருவெண்ணெய்நல்லூர் பேரூராட்சி ஆண்கள் மற்றும் பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள், எழுதுகோல், இனிப்புகள் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி வழங்கினார். மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு விசுவநாதன், நகரச் செயலாளர் கோபிகிருஷ்ணன், பேரூராட்சி செயலாளர் பூக்கடை கணேசன், பேரூராட்சி தலைவர் அஞ்சுகம் கணேசன், ஒன்றிய குழு தலைவர் ஓம்சிவசக்திவேல், பேரூராட்சி துணைத் தலைவர் ஜோதி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஸ்ரீவினோத், உள்ளிட்ட ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், அணி நிர்வாகிகள், தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர் பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர்.







துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் சாதனைகள் விளக்க பொதுக்கூட்டம் சேலம் கிழக்கு மாவட்டம் நரசிங்கபுரம் நகர தி.மு.க. சார்பில் நடைபெற்றது. இதில் நகரச் செயலாளர் வேல்முருகன், தலைமைக் கழக பேச்சாளர் கந்திலி கரிகாலன், பிரகாஷ், சாந்தி, பரமசிவம், இளவரசு, ராமசாமி, ஜோதி, விஜயகுமார், மணிபாரதி, அருண்குமார், சுப்பிரமணி, அலெக்சாண்டர், சக்திவேல், புஷ்பாவதி கதிர்வேல், கண்ணன், புலித்தேவன், ரமேஷ், வெங்கடேஷ், செல்வகுமார், பாண்டியன், ஞானம் மற்றும் நகர நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.